## காவல் கண்காணிப்பாளர், இருப்புப்பாதை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள்

**பிறப்பிப்பவர்: திருமதி.எ.செ.உமா, இ.கா.ப**

ந.க.எண்.அ3/5822/2022
மாவட்ட ஆணை எண் : 306/2022

நாள்: 28.06.2022

**சிறுதலைப்பு:** காவல்- இருப்புப்பாதை, சென்னை- பணியமைப்பு- சென்னை இருப்புப்பாதை காவல் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு.த.ஷாஜிகுமார் (த/பெ.மறைந்த மு.நிகா.569 தங்கையன்/கன்னியாகுமரி மாவட்டம்) என்பவரது பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடுவது- தொடர்பாக

**படிக்கப்பட்டவை:** அரசாணை (நிலை) எண்..80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை நாள்: 02.03.2016

2) துலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண். 041769/சி.ஏ.1/2016, நாள்: 08.04.2016

3) துலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண் 041769/சி.ஏ.1/2016, நாள்: 21.12.2017

* * * * * *

**ஆணை : -**

சென்னை இருப்புப்பாதை காவல் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு.த.ஷாஜிகுமார் (த/பெ.மறைந்த மு.நிகா.569 தங்கையன்/கன்னியாகுமரி மாவட்டம்) என்பவர், அரசாணை எண்.989 உள்(காவல்15) துறை நாள்: 21.10.2002 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.1433/சி.ஏ.1/2005, நாள்: 13.07.2005-ன்படி கருணை அடிப்படையில் தற்காலிகமாக கணினி விபர பதிவாளராக கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 06.10.2005 பி.ப பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். இவரது பணியானது, தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.175817/A&R/2007, நாள்: 14.03.2016 மூலம் சார்பு செய்யப்பட்ட அரசாணை நிலை எண்220 உள்(காவல்15) துறை நாள்: 18.02.2016-ன்படி, 01.05.2007 முற்பகல் முதல் கணினி விபர பதிவாளர் நிலையில் வரன்முறைப்படுத்தி இம்மாவட்ட ஆணை எண். 187/2016, ந.க.எண்.அ3/3833/2016, நாள்: 13.06.2016-ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேலும், இவர் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.211917/சி.ஏ.1/2014, நாள்: 17.04.2015-ன்படி, பணிமாறுதலில் இவ்வலுவலகத்தில் 06.05.2015 பி.ப அறிக்கை செய்துள்ளார். மேலும், தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.084761/NGB 2(2)/2018, நாள்: 02.08.2018-ன்படி, பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, 08.08.2018 மு.ப பணிக்கு அறிக்கை செய்துள்ளளர். இவரது மூலக்கோப்பினை பரிசீலனை செய்ததில், மேற்படி இளநிலை உதவியாளரின் தந்தை மு.நி.கா.569 திரு.தங்கையன் என்பவர் கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது கடந்த 03.06.1996 அன்று விபத்தினால்

மரணமடைந்துள்ளார். அவரது மனைவி திருமதி.K.அம்மு என்பவர் தனது இளைய மகன் திரு.த.ஷாஜிகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 17.05.1999 அன்று மனு சமர்ப்பித்துள்ளார். தனியர் அன்றைய தேதியில் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய கல்வி தகுதியான 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் மெய்த்தனமை அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை அவர்களின் கடித ஓ.மு.எண்.015419/வி4.2/2014, நாள்: 12.02.2014-ன்படி சரிபார்க்கப்பட்டுள்ளது.

3) மேலே 2-வதாக படிக்கப்பட்ட தலைமையலுவலக குறிப்பாணையில், 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட, எந்தவித விதித்தளர்வு மற்றும் விலக்கு தேவைப்படாத அலுவலர்களின் பணியினை நியமன அலுவலர்கள் வரன்முறைப்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மேலே 3-வதாக படிக்கப்பட்ட தலைமையலுவலக குறிப்பாணயில் கணினி விபரப்பதிவாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் முறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உள்ள இளநிலை உதவியாளர் பதவிக்கு பணிநியமனத்துடன் கூடிய பணிவரன்முறைக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறத் தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4) எனவே, பணிநியமனம் வேண்டி அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுக்குள் மனு சமர்ப்பித்துள்ளதாலும், மனு சமர்ப்பித்த நாளன்று தனியர் இளநிலை உதவியாளர் பணிநியமனத்திற்கு தேவையான 10-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற விதிக்கப்பட்டுள்ள பிற விதிகள் மற்றும் கட்டுபாடுகளை நிறைவு செய்துள்ளதாலும், மேலே படிக்கப்ப தலைமையலுவலக குறிப்பாணைகளின்படி, திரு.த.ஷாஜிகுமார் என்பவரது பணியானது இளநிலை உதவியாளர் நிலையில் அவர் பணிக்கு அறிக்கை செய்த நாளான 08.08.2018 மு.ப முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

ஒம்/- E.S.உமா
காவல் கண்காணிப்பாளர்,
இருப்புப்பாதை, சென்னை.

பெறுநர்

திரு.த.ஷாஜிகுமார், இளநிலை உதவியாளர், இருப்ப்புபாதை காவல் அலுவலகம், சென்னை

நகல்: அனைத்து பணியாளர்கள், இருப்ப்புபாதை காவல் அலுவலகம், சென்னை
நகல்: மாவட்ட ஆணைப் புத்தகம்.

// உ.ந.உ.ப.அ. //

நிர்வாக அலுவலர்